Vol. 5, Issue-1, June 2021 P.No. : 29 - 35

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

SACRED HEART RESEARCH PUBLICATIONS

http://shcpub.edu.in

**முனைவர் ந.சோழன்**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர் - 635 601.*

**தலைப்பு :** *அஃறிணை உயிர்களும் பரஞ்சோதியாரின் திருவிளையாடல் புராணமும்*

உலகிலுள்ள எவற்றையும் நுணுகிப் பார்க்க வேண்டும். அவ்வாறு நுணுகிப் பார்ப்பதன் வாயிலாக ஒன்றன் இயல்பையும் உண்மைத் தன்மையையும் உணர்ந்து கொள்ள முடியும். அந்த வகையில் தமிழர்கள் உள்ளதன் நுணுக்கத்தை ஆராய்ந்தறிவதில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்கள். மனிதன் பல்வேறு கால, சூழல்களுக்கு ஏற்றவாறு தன்னுடைய உணர்ச்சியை வெளிப்படுத்தும் தன்மை கொண்டவன். அவ்வாறு அவன் வெளிப்படுத்துகின்ற உணர்ச்சிகளை எல்லாம் ஆராய்ந்தறிந்து அகம், புறம் என்ற இரண்டிற்குள் அடக்கிக் கொண்டனர் தமிழ்ச் சான்றோர். உலகில் உள்ள எவ்வகை உணர்ச்சி நிலையையும் இந்த இரண்டின் பாகுபாட்டிற்குள் அடக்கிவிட முடியும். அதுபோலவே இந்த உலகில் உள்ள உயிருள்ளவற்றையும் உயிரற்றவற்றையும் ஆராய்ந்தறிந்து உயர்திணை, அஃறிணை என்ற இரு திணைகளுக்குள் அடக்கிக் கொண்டனர். உயர்திணையுள் உயிருள்ளவை மட்டுமே அடங்கும். ஆனால் அஃறிணையுள் உயிருள்ளவை மற்றும் உயிரற்றவை

ஆகிய இரண்டுமே அடங்கும். அவ்வகையில் பரஞ்சோதி முனிவர் இயற்றியுள்ள திருவிளையாடல் புராணத்தில் இடம் பெற்றுள்ள அஃறிணையுள் உயிருள்ளவை குறித்து ஆராயும் முகமாக இக்கட்டுரை அமைகின்றது.

**திருவிளையாடல் புராணம்**

சிவபெருமான் இந்த மண்ணிலுள்ள பல்வேறு உயிர்களிடத்தும் நடத்திய அற்புதங்களைப் பேசுகின்ற நூலாக இப்புராணம் அமைகின்றது. தமிழில் சிவபெருமானின் திருவிளையாடல்களைப் பேசுகின்ற நூல்களாகக் கடம்பவன புராணம், சுந்தரபாண்டியம், திருவாலவாய்த் திருவிளையாடல் புராணம், திருவிளையாடல் புராணம் ஆகிய நூல்கள் அமைகின்றன. இந்த நூல்களில் பேசப்படுகின்ற சிவபெருமானின் திருவிளையாடல்கள் வடநாட்டுப் புராணங்களின் அடிப்படையாக அமைந்தது என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. எனினும் இவை போன்ற பழங்கதைகள் முழுக்கவே ஒரு குறிப்பிட்ட இடத்தாருக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கோ உரியதாக இருக்க வாய்ப்பில்லை. கட்டாயம் ஊடாட்டம் நடைபெற்று இருக்க வேண்டும். அத்தகைய ஊடாட்டத்தின் விளைவாகவே இத்தகைய புராணங்கள் தோன்றியிருக்க வேண்டும். அவ்வகையில் சிவபெருமானின் 64 திருவிளையாடல்களைக் குறித்துப் பேசுகின்ற மேற்கண்ட புராணங்களுள் மிகச் சிறந்த புராணமாகப் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணம் அமைகின்றது.

பரஞ்சோதி முனிவரின் காலம் குறித்துப் பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. பரஞ்சோதி முனிவர் கி.பி. 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்றும் கி.பி. 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்றும் அறிஞர்களிடையே கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. அவரின் காலம் குறித்து நமக்குக் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் அவர் இயற்றிய திருவிளையாடல் புராணமானது சிறந்த கட்டமைப்பும் சொல் நயமும் உடைய நூலாக விளங்கி நிற்கின்றது. பரஞ்சோதியாரின் திருவிளையாடல் புராணமானது சிவபெருமானின் 64 திருவிளையாடல்களையும் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று காண்டங்களின் வாயிலாகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

**அஃறிணை உயிர்களின் பயன்பாடு**

*பரஞ்சோதியாரின் திருவிளையாடல் புராணத்தில் யானை, பாம்பு, பசு, பன்றி, குருவி, நாரை, குதிரை, நரி ஆகிய அஃறிணை உயிர்கள் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன. இந்த உயிர்களின் பயன்பாடானது மூன்று நிலைகளில் அமைகின்றன.*

1. *தவறிழைத்த அஃறிணை உயிர்கள் தங்களுடைய தவறினை உணர்ந்து சிவபெருமானின் அருளால் முக்தி அடைவது.*
2. *சிவபெருமான் தன்னுடைய திருவிளையாடல்களின் பொருட்டு அஃறிணை உயிர்களைப் பயன்படுத்திக்கொள்வது.*
3. *சைவ சமயச் சார்புடையோரின் மீது சமயக் காழ்ப்புணர்வு கொண்ட சமணர்கள் பேருருவுடன் கூடிய அஃறிணை உயிர்களை ஏவிக் கொல்ல முயல்வது.*

*இந்த மூன்று நிலைகளுள் முதல் நிலையினை மையமிட்டு அமைகின்ற பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம் மற்றும் பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் ஆகிய படலங்களின் வாயிலாகப் பன்றி என்ற அஃறிணை உயிரை மையமாகக்கொண்டு பேசப்பட்டுள்ள செய்திகளை மட்டும் ஆய்வின் நுண்மை கருதி, தனது எல்லையாக இக்கட்டுரை அமைத்துக் கொள்கின்றது,*

**சாபம் பெறுதல்**

*வைகை ஆற்றின் தெற்கே குருவிருந்ததுறை என்ற ஊரில் வாழ்ந்து வருகின்ற சுகலன், சுகலை ஆகிய இணையருக்குப் பன்னிரு புதல்வர்கள் பிறக்கின்றனர். அப்புதல்வர்கள் பெற்றோரின் இறப்பிற்குப் பிறகு நெறி தவறிச் செல்கின்றனர். வனத்தில் தவம் செய்து கொண்டிருக்கின்ற வியாழ பகவானின் தவத்தினைக் கலைத்து அவரிடம் பன்றிகளாகப் பிறப்பெடுக்கின்ற சாபம் பெறுகின்றனர். இதனை,*

*தொழும் தொழில் மறந்து வேடத் தொழில் உழந்து உழல் வீர் நீர் மண்*
*உழும் தொழில் உடைய நீரால் பன்றியின் உதரத்து எய்திக்*
*கொழும் தொழில் அனைய ஏன குருளையாய்த் தந்தை தாயை*
*இழந்து அலம் உறுமின் என்னா இட்டனன் கடிய சாபம்.        (பா.எ. 2199)*

*என்ற அடிகள் விளக்கி நிற்கின்றன.*

**வேட்டையாடல்**

முனிவர் இட்ட சாபத்திற்கேற்பச் சுகலனின் புதல்வர்கள் *12* பேரும் இராசராச பாண்டியன் ஆளுகைக்குட்பட்ட வனத்தில் வாழக்கூடிய ஒரு பன்றி அரசனுக்குப் புதல்வர்களாகப் பிறக்கின்றனர். அச்சமயத்தில் இராசராச பாண்டியன், 'வீரனுக்கு மனித எதிரிகள் கிடைக்காதபோது அவன் தன்னுடைய வீரத்தை வெளிப்படுத்த இயற்கையோடும் அச்சந்தரும் விலங்குகளோடும் போரிடுவான்'*(C.M.Bowra 1952: 49)* எனப் பெளரா கூறுவதற்கு ஏற்ப வனத்திற்கு வேட்டையாட வருகிறான். வனத்தில் அவன் பல்வேறு விலங்குகளை வேட்டை ஆடுகின்றான். இறுதியாகப் பன்றிக் கூட்டத்தையும் நோக்கி வேட்டையாட வருகின்றான்.

**பன்றியின் வீரம்**

இராசராச பாண்டியன் வேட்டையாட வருவதைக் கேள்விப்பட்ட பன்றி அரசன் வெகுண்டு எழுகின்றது. தனது பெண் பன்றியை நோக்கி இராசராசனின் படையை மண்ணோடு மண்ணாகத் தேய்த்து, அழித்துத் திரும்பி வருவேன் என்று வீரமொழி புகல்கின்றது. இதனை,

இன்று பாண்டியனை நேரிட்டு அரும் சமர் ஆடி வென்று
வன்திறல் வாகையோடு வருகுவன் ஏயோ அன்றிப்
பொன்றுவன் ஏயோ நீ உன் புதல்வரைப் பாதுகாத்து
நன்று இவண் இருத்தி என்ன நங்கைகைப் பேடு இன்ன கூறும். *(பா.எ. 2216)*

என்ற அடிகள் விளக்குகின்றன. பெண் பன்றியோ உங்களை விட்டுப் பிரிந்து என்னால் இருக்க முடியாது என்று கூறி ஆண் பன்றிக் கூட்டத்தோடு தானும் போரிடப் புறப்பட்டுச் செல்கின்றது.

**உயிர்ப் பயமின்மை**

பன்றிக் கூட்டங்களைக் கண்ட இராசராசனின் படைவீரர்கள் மூர்க்கத்தனமாக அவற்றைத் தாக்கத் தொடங்குகின்றனர். பன்றிகளும் வீரர்களுக்குச் சரிக்குச் சமமாக எதிர்நின்று கடும்போர் புரிகின்றன. இதனைக் கண்டு இராசராசனின் வீரர்கள் வியந்து நிற்கின்றனர். இருதரப்பிலும் கடும் உயிர்ச் சேதம் ஏற்படுகின்றது. இறுதியில் பன்றிக் கூட்டத்தில் பன்றி அரசனும் அரசியும் மட்டுமே எஞ்சி நிற்கின்றன. அச்சூழலில் பன்றியரசி நாம் இப்போது உயிர் தப்பி விடுவது சாலச் சிறந்தது எனக்

கூறுகின்றது. ஆனால் பன்றி அரசனோ, 'வீரத்தின் வழிப் பெறப்படுகின்ற பெருமிதத்திற்காகத் தங்களின் உயிரையும் வீரர்கள் பணயம் வைப்பர்'(C.M.Bowra 1952: 1-4) எனப் பௌரா கூறுவதற்கேற்ப,

அத்திட மரபின் வந்து பிறந்து உளேன் ஆதலாலே

கைத்திடு தாரான் வீரம் கவர்ந்து திசை திசையும் வானும்

வைத்திட வல்லேன் அன்றி மடந்திட வல்லேன் ஆகில்

பொய்த்திடும் உடம்பே அன்றி புகழ் உடம்பு அழிவது உண்டோ. (பா.எ. 2228)

என வீர மொழி புகல்கின்றது. இறுதியில் கடும் போருக்குப்பின் இராசராசனின் இரும்புத் தண்டத்திற்குப் பன்றி அரசன் பலியாகின்றது.

**வீர சொர்க்கம்**

தன்னுடைய கணவன் இறந்த பிறகு கடும் கோபம் கொண்ட பெண் பன்றியானது கடுமையாகச் சண்டையிடுகின்றது. பெண் பன்றியோடு சண்டையிடுவது வீரம் அல்ல என்று வேடர் தலைவனான சருச்சரன் விலகிச் செல்கிறான். எனினும் கடும் கோபத்துடன் பெண் பன்றியானது அவனைத் தாக்க முற்படுகின்றது. ஆகையால் வேறுவழியின்றி அவன் பெண் பன்றியோடு போரிடுகிறான். இருவரும் கடுமையாகப் போரிட்டு இறுதியில் இறந்து விடுகின்றனர். இறந்த பிறகு அவர்கள் வீர சொர்க்கத்திற்கு அன்றே செல்கின்றனர். இதனை,

இரும்பு செய் தண்டினை இம் என ஓங்கிப்

பொரும் படை சென்னி புடைத்து விளிந்தான்

விருந்தினர் ஆய் இருவோரும் விமானத்து

அரும் திறல் வானம் அடைந்தனர் அன்றே (பா.எ. 2241)

என்ற அடிகள் உணர்த்தி நிற்கின்றன. போரில் இறந்த வீரர்கள் வீர சொர்க்கத்திற்கு செல்வர் என்ற நம்பிக்கையானது உலக இலக்கியங்களிலும் பேசப்படுகின்றது. பௌராவும் இக்கருத்தினைக் குறிப்பிட்டு, 'ஜெர்மானிய வீரர்கள் போர்க்களத்தில் இறந்த பிறகு வல்கல்லா (Valhalla) என்ற பெயருடைய வீர சொர்க்கத்திற்குச் செல்வர்' (C.M.Bowra 1952: 464-466) என்ற நம்பிக்கை நிலவுகின்றமையையும் எடுத்துக்காட்டியுள்ளமை இவ்விடத்தில் நோக்கத்தக்கது.

**இறைவன் பாலூட்டல்**

*பெற்றோரை இழந்த பன்றிக்குட்டிகள் பன்னிரண்டும் பரிதவித்து நிற்கின்றன. மேலும் தாகத்தாலும் பசியாலும் தாயின் முலைப்பாலை விரும்பித் தவித்தன. அதனைக் கண்ணுற்ற சிவபெருமான் அவற்றின் மீது இரக்கம் கொண்டான். தானே தாய்ப் பன்றியின் உருவில் சென்று அவைகளுக்குப் பாலூட்டினான். அந்தப் பன்றிக் குட்டிகளுக்கு நற்குணங்களையும் நல்லறிவையும் புகட்டி, அவற்றின் முகத்தை மட்டும் பன்றி முகமாக இருக்கச் செய்து பிற அங்கங்கள் எல்லாம் மானுட உறுப்புகளாக வழங்கிவிட்டு மறைந்தருளினார்.*

**அமைச்சராக்கி முக்தி வழங்குதல்**

*இராசராச பாண்டியனின் கனவில் தோன்றிய சிவபெருமான் வனத்தில் பன்றி முகமும் மானுட உடலமைப்பும் கொண்ட விசித்திர உருவினராய்ப் பன்றி மலையில் 12 இளைஞர்கள் உள்ளனர். அவர்களின் அறிவுத்திறன் அளவு படாதது. அப்பன்றிமுகக் குமாரர்களை மந்திரிகளாக்கிக் கொள்வாயாக. அதனால் உன் ஆட்சியின் மாட்சி இன்னும் அதிகப்படும் என்று கூறினான். அவ்வாறே அரசனும் அவர்களை மந்திரிகள் ஆக்கினான். அவர்கள் தங்களுக்கு முன்பு மந்திரிகளாக இருந்தோரின் மகள்களை மணந்து சிறப்பாக வாழ்ந்தனர். பிறகு இறைவன் சிவபெருமான் எண்ணியவாறே உலகப் பற்றுக்களிலிருந்து விடுபட்டுச் சிவகதி அடைந்தனர். இதனை,*

*அளவு இல் ஆற்றலும் திறனும் நல் அரும் பெறல் கல்வி*

*விளைவும் ஞானமும் கிடைத்தனர் மீனவற்கு இனிமேல்*

*வளைவு இலாத கோல் அமைச்சராய் வளம் பல பெருக்கிக்*

*களைவு இல் பாசம் நீத்து எம்பெரும் கணத்தவர் ஆவார் (பா.எ. 2262)*

*என்ற அடிகளும் உணர்த்தி நிற்கின்றன.*

*பரஞ்சோதியாரின் திருவிளையாடல் புராணத்தில் அஃறிணை உயிரான பன்றியை மையமாகக் கொண்ட பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம் மற்றும் பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் ஆகிய படலங்களின் வாயிலாக மனிதர்களுக்கு மட்டுமல்ல பன்றிகளுக்கும் வீரப் பெருமிதம் என்பது உண்டு என்பதனை விளங்கிக் கொள்ள முடிகின்றது. பன்றிகளை முழுதும் மனித உருவமாக மாற்றாமல் முகத்தை மட்டும் பன்றி உருவமாக இறைவன் மாற்றியிருத்தல் என்பது இந்த உலகில்*

எல்லோருக்கும் குறை என்பது இருக்கும். அந்தக் குறைபாட்டோடு நிறை வாழ்க்கை வாழ வேண்டும் என்பதை உணர்த்துவதற்கே ஆகும். மேலும், தீநெறி சென்ற உயிர்கள் தங்களுடைய தவறினை உணர்ந்தால் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு உலகப் பாசங்களிலிருந்து விடுபட்டுப் பதியாகிய இறைவனைச் சென்றடையலாம் என்ற சிவ தத்துவமும் வெளிப்பட்டு நிற்கின்றமை புலனாகின்றது.

**துணை நூல்கள்**


1. *கோபாலன், ப. 1983. பரஞ்சோதி திருவிளையாடற் புராணம் – இலக்கிய மதிப்பீடு, கோவை, இலட்சுமி பதிப்பகம்.*
2. *பத்மதேவன், 2005, திருவிளையாடற் புராணம், சென்னை, இந்து பப்ளிகேசன்ஸ்.*
3. *பரஞ்சோதி முனிவர், 1956. திருவிளையாடற் புராணம், சென்னை, கழகம்.*
4. *Bowra. C.M. 1952. Heroic Poetry. London: Macmillan & co. Ltd.*